**செய்தி வெளியீடு எண்: 905** **நாள்: 12.12.2018**

**செய்தி வெளியீடு**

சவுதி அரேபியா அமைச்சகத்தின் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு தீவிர சிக்ச்சைபிரிவு(ICU), இன்டெர்னல் மெடிசின்(Internal medicine),பொது அறுவைசிகிச்சை (GENERAL SURGERY) பேமிலி மெடிசின் (Family Medicine),மகப்பேறு(OBSTETRICS AND GYNAECOLOGY) போன்ற பிரிவுகளில் அனுபவமிக்க அலோபதி மருத்துவர்களுக்கான நேர்முகத்தேர்வு கொச்சியில் 17.12.2018 முதல் 19.12.2018,கொல்கத்தாவில் 21.12.2018 முதல் 22.12.2018,டெல்லியில் 24.12.2018 முதல் 26.12.2018 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது

இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 55 வயதிற்குட்பட்ட கன்சல்டன்டுகள்(Consultants),மற்றும் சிறப்பு மருத்துவர்கள்(Specialist), விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு மருத்துவர்களுக்கு அனுபவத்திற்கேற்ப ரூ.1.84 இலட்சம் முதல் ரூ.5.09இலட்சம் வரைமாத ஊதியமாக வழங்கப்படும்.

மேலும், கண்சல்டண்ட் மருத்துவர்களுக்கு ரூ.2.42 இலட்சம் முதல் ரூ.7.59 இலட்சம் வரை மாத ஊதியமாக வழங்கப்படும்.

இது தவிர, திறமையின் அடிப்படையில் கூடுதல் ஊதியத்துடன் இலவச விமானடிக்கெட், உணவு, இருப்பிடம், விசா, மருத்துவச் சலுகை, போக்குவரத்துப்படி, சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு மற்றும் சவூதி அரேபியா அமைச்சகத்தின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்டஇதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள மருத்துவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவச் சான்றிதழ், பாஸ்போர்ட், ஆதார் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemcldr1@gmail.comஎன்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் அலுவலக தொலைபேசி எண்கள் : 22505886/22502267/8220634389/ 9566239685 மூலமாகவும் அல்லது www.omcmanpower.comஎன்ற வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண் Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84, ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**